

- வாழ்வோம்

தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில், தி.மு.க. வெற்றிபெற்றால் மட்டுமே, த.வெ.க. குதிரை பேரம் நடத்தாது' என முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார், எழுத்தாளர் ஷாஜகான். அவரது பதிவிலிருந்து...

``இந்தத் தேர்தலில் த.வெ.க. வெற்றிபெற்றால் என்ன நடக்கும்?

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி, ராஜினாமா செய்ய வைத்து, அவர்களையே மீண்டும் அதே தொகுதியில், த.வெ.க. வேட்பாளராக நிறுத்தினாலும், மக்கள் வாக்களிப்பார்கள் என்ற த.வெ.க.வின் திட்டம் வெற்றிபெற்றதாக ஆகும். அது, த.வெ.க.வுக்கு இன்னும் தைரியத்தைக் கொடுக்கும். மீண்டும் இதே போல குதிரை பேரத்தில் இறங்கி, அ.தி.மு.க. வேட்பாளர்கள் இன்னும் சிலரையும் விலைக்கு வாங்கி, ராஜினாமா செய்யவைத்து, மீண்டும் தேர்தல் நடக்க வைத்து, பெரும்பான்மை பெற முயற்சி செய்யும்.

த.வெ.க. மீதான பிம்பம் உடைந்து நொறுங்கட்டும்!


அ.தி.மு.க. வெற்றிபெற்றால் என்ன நடக்கும்? அ.தி.மு.க. பலவீனம் அடைந்து விட்டது என்றாலும், தார்மீகரீதியாக அ.தி.மு.க.வுக்கு அது உத்வேகத்தை அளிக்கும். த.வெ.க.வுக்கு மிகப்பெரிய அடியாக இருக்கும்.

இப்படியே நூலிழைப் பெரும்பான்மையில் ஓட்டிக்கொண்டிருக்க முடியாது. எனவே, பெரும்பான்மை கிடைக்க த.வெ.க. எந்த எல்லைக்கும் போகும். இன்னும் ஐந்து தொகுதிகளுக்கு எப்படியும் இடைத்தேர்தல் நடக்கத்தான்போகிறது. அப்படி நடக்கும்போது, ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் த.வெ.க. எப்பாடுபட்டாவது பெரும்பான்மை பெற்றே தீரும்.

த.வெ.க.வுக்குப் பெரும்பான்மை கிடைத்த பிறகு, கட்சி மாறினால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. த.வெ.க. சிக்கலில் இருக்கும்போது போனால்தான் முக்கியத்துவம் கிடைக்கும் என்று, கட்சிமாறிகள் கணக்குப் போடுவார்கள். ஆக, த.வெ.க. இப்போது வெற்றிபெற்றால், இன்னும் குதிரை பேரம் தொடரும். அ.தி.மு.க. வெற்றிபெற்றால், இன்னும் மிகத் தீவிரமாகக் குதிரை பேரம் நடக்கும்.

இந்தச் சூழலில், தி.மு.க. வெற்றிபெறுவதுதான் அவசியம். `தி.மு.க. வெற்றி பெற்றால் மட்டும் த.வெ.க. குதிரை பேரங்கள் செய்யாதா?' என நீங்கள் கேட்கலாம். அப்போதும் நடக்கும். ஆனால், த.வெ.க. மீதான பிம்பம் உடைந்துபோயிருக்கும். ஆட்சிக்கு வந்த நான்கு மாதங்களுக்குள்ளேயே இடைத்தேர்தலில் வெற்றிபெற முடியாத கட்சி என்பது புரிந்துபோகும். விலைவாசி உயர்வு, மின்வெட்டு, படுகொலைகள் என ஏற்கெனவே நாறிக்கொண்டிருக்கும் த.வெ.க. ஆட்சியின்மீது நான்கே மாதங்களில் வெறுப்பு வந்துவிட்டது என்று மக்களுக்குத் தெரிந்துபோகும். அது, அடுத்து வரும் இடைத் தேர்தல்களிலும் த.வெ.க.வுக்கு எதிரான விளைவைத் தரும். இதற்காக, தி.மு.க. வெற்றிபெற வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அட்டைக் கத்திகளின் அவதாறுகள்!



77

கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

சர்க்காரியா விசாரணைக்கு உட்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து, ஒன்றின்மேல் ஒன்றாக அவ்வப்போதே வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார் கலைஞர். எம்.ஜி.ஆர். முன்வைத்த குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை எனும் நிலை ஏற்பட்டால், யாரை அழிக்க நினைத்தார்களோ அவரது கை மேலோங்கிவிடுமே என்ற நிலையில், ஒன்றிய - மாநில அரசின் புலனாய்வுத் துறைகள் முழுமூச்சில் முடுக்கிவிடப்பட்டு, அவர்களும் சகல முயற்சிகளைச் செய்தனர். இராயப்பா அவர்களின் வாக்குமூலத்தில் இருந்தே, அதை அறிய முடியும்.

ஒருபுறம், அதிகாரிகளிடம் போலி வாக்குமூலம் பெற எல்லா வழிகளிலும் அழுத்தம் கொடுத்துக்கொண்டே... இன்னொரு பக்கம் கலைஞரின் அலுவலக ஊழியர்கள், உறவினர்களை மிரட்டும் பணிகளும் நடைபெற்றன. 'மேகலா பிக்சர்ஸ்', 'அஞ்சுகம் பிக்சர்ஸ்' போன்ற நிறுவனங்களில் பணியாற்றிய கணக்காளர் - தயாரிப்பு நிர்வாகிகள் இல்லங்களில் சோதனைகள் நடைபெற்றன. நீண்ட நாட்களாக 'முரசொலி' மற்றும் கலைஞர் குடும்ப கணக்குவழக்குகளைப் பார்க்கும் அழகுமாணிக்கத்தை சி.பி.ஐ. கைதுசெய்து அழைத்துச்சென்று, விசாரணை என்ற பெயரில் மிரட்டி, ஏதாவது ஆதாரம் பெறலாம் என முயற்சிகள் செய்தது.

வருமான வரித் துறையினர் கோபாலபுரம் இல்லத்தில் நடத்திய சோதனை குறித்து கலைஞர், 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிடுகிறார். "ஒருநாள் கோபாலபுரம் வீட்டிலிருந்து வெளியே கிளம்புகிறேன். வருமான வரித் துறையினர் கூட்டமாக வந்தனர். 'முதலமைச்சரானபோது வாங்கிய வீடுதானே இது? இதை மதிப்பீடு செய்ய வேண்டும்!' என்றனர். '1956-இல் வாங்கிய வீடய்யா இது; என்மீது புகார் கொடுத்த எம்.ஜி.ஆருக்கு இது கூடவா தெரியாது' என்று கேலியாகக் கேட்டேன்! வீட்டை அளந்து மதிப்பீடு செய்ய வேண்டுமென்றனர். 'தாராளமாகச் செய்துகொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு, உள்ளேயிருந்த என் மனைவி தயாளுவைக் கூப்பிட்டு, 'வீட்டை இவர்கள் அளந்து மதிப்பீடு செய்ய வேண்டுமாம், தாராளமாகச் செய்துகொள்ளட்டும்; நீயும் பிள்ளைகளும் உடனிருந்து பார்த்துக்கொள்ளுங்கள்' எனக் கூறிவிட்டு, 'முரசொலி' அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன்."

"வீடு வெளித்தோற்றத்தில் பழையதாகக் காணப்பட்டாலும், கலைஞர் முதல்வரான பிறகு, வீட்டின் உள்ளே பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டு பளபளப்பு கூட்டப்பட்டிருக்கும், விலையுயர்ந்த ஆடம்பரப் பொருள்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்ற எண்ணத்தில் வீடு புகுந்த அதிகாரிகள், அது தெரு வீடாகவே இருந்ததால், அவர்கள் எதிர்பார்த்த ஏதுமில்லாததைக் கண்டு அதிர்ந்துபோனார்கள்! அத்தகைய வீட்டை அளந்து பார்த்தனர்! கணக்கில் காட்டப்பட்டிருந்ததைவிட கூட்டிக் காட்டிட, எவ்வளவோ முயன்றும் எதையும் அவர்களால் காண முடியவில்லை! காலையில் வருமான வரித் துறை சார்பில், சிலர் வந்து அளப்பர். மாலையில் கார்ப்பரேஷனிலிருந்து சிலர் வந்து, அனுமதிக்கப்பட்ட வரைபடத்துக்கு மேலே கட்டப்பட்டுள்ளதா என வீட்டு வரைபடத்தை எடுத்துவந்து வைத்துச் சரிபார்ப்பர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப் பல திசைகளில் இருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்ட நேரத்தில், சர்க்காரியா விசாரணைக்கு உட்பட்ட குற்றச்சாட்டுகளை, எம்.ஜி.ஆர். நல்ல நோக்கத்துடன் கூறினாரா? என்கிற கேள்வியையும் எழுப்பவேண்டியுள்ளது.

அவரே முன்வைத்ததுபோல, 'அரசியலைத் தூய்மைப்படுத்தும் எண்ணம்தான் அந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் காரணமா?' என்றால், அதுதான் இல்லை. எம்.ஜி.ஆர். கொடுத்த ஊழல் பட்டியலில் இருந்த அமைச்சர்கள் சிலரை, 1977 காலகட்டத்திலும் அதற்குப் பிறகான காலத்திலும் அ.தி.மு.க.வில் சேர்த்துக்கொண்டார்.

'சர்க்காரியா புகார்'களில், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த புகார்களில் ஒன்றாக நாவலர் மீது சுமத்தப்பட்ட 'நாதன் பதிப்பகம்' புகாரும் இருந்தது. முதல் அறிக்கையில் இடம்பெற்ற ஒன்பது விசாரணைப் பட்டியல்களில் 11-(A) என்ற எண்ணில் 'NATHAN PUBLICATIONS' இடம்பெற்றது. 1972 நவம்பர் 4-ஆம் தேதி, எம்.ஜி.ஆர். குடியரசுத் தலைவருக்கு அளித்த புகாரிலும், நவம்பர் 6-ஆம் தேதி மு.கல்யாணசுந்தரம் அளித்த புகாரிலும் இடம்பெற்றிருந்தது. கலைஞரின் அமைச்சரவைமீது குற்றம் சாட்டப்பட்ட அந்தப் புகாரில் விசாரணை நடந்துகொண்டிருக்குபோதே, குற்றம் சாட்டியவருடனே கைகோர்த்தார் நாவலர். அதாவது, அ.தி.மு.க.வில் இணைத்துக்கொண்டார். எம்.ஜி.ஆர். தந்த ஊழல்பட்டியலில் சத்தியவாணிமுத்து அம்மையார் பெயரும் இருந்தது. பின்னர், அவரும் அ.தி.மு.க.வில் இணைந்து, ஒன்றிய அமைச்சரவையில் சில காலம் அமைச்சராகவும் இருந்தார்!

எனக்கு எதுவும் தெரியாது

இந்தக் கூத்துகள் மட்டுமல்ல; கலைஞர் மீது கூறிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடக்கும்போதே, எம்.ஜி.ஆர். ஓர் 'அந்தர் பல்டி' அடித்தார். தொடக்கத்தில், எம்.ஜி.ஆரும் கல்யாணசுந்தரமும் குடியரசுத் தலைவரிடம் அளித்த புகார் மனுக்கள் தொடர்பாக, அந்தப் புகார் மனுவில் இருந்த குற்றச்சாட்டுகள் எவ்வளவு போலியானவை, பொய்யானவை என்பதை விளக்கி, ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கான பதிலையும் ஆதாரங்களையும் புத்தகமாக அச்சிட்டு, அதனைச் சட்டமன்றத்திலேயே வெளியிட்டார் கலைஞர். ஆனால், எம்.ஜி.ஆர் மீண்டும் மீண்டும் குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதங்களில், 'விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால், இந்தக் குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்க முடியும்' என்றார்.

எம்.ஜி.ஆரைத் தூண்டி, புகார் மனுவைக் கொடுக்கச் சொன்னவர்கள், அவர் - கத்தியை வீசுவார் எனக் கருதினர். ஆனால் அவரோ, அட்டைக்கத்தியைக்கூட வீசவில்லை. 'சர்க்காரியா கமிஷன் சூழ்ச்சி வலை' என்பதால், விசாரணையை எதிர்கொள்ள கழகத்தின் வழக்கறிஞர்கள் மட்டுமின்றி, இந்திய அளவில் மிக முக்கியமான வழக்கறிஞர் சாந்திபூஷண் அவர்களையும் தன் சார்பில் வாதிட நியமித்தார் கலைஞர்.

விசாரணைக் கமிஷன் அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தொடங்கியபோது, நீதிபதி சர்க்காரியாவிடம் வழக்கறிஞர் சாந்திபூஷண், மனு ஒன்றினை அளித்தார். குற்றச்சாட்டுப் புகார்களைக் கொடுத்துள்ள எம்.ஜி.ஆரைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும்; அதே போல சர்க்காரியா கமிஷன் முன் சாட்சியாகச் சேர்க்கப்பட்டவர்கள் எல்லாரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும் என அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது. ஆனால் நீதிபதி சர்க்காரியா, அந்த மனுவில் உள்ள கோரிக்கைகளை ஏற்கவில்லை. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்காவிட்டால், இந்த விசாரணையில் பங்கேற்பதே பயனற்றது என்ற முறையில் விசாரணையைப் புறக்கணித்தார் கலைஞர்.

இந்தக் காலகட்டத்தில்தான், எம்.ஜி.ஆரின் 'அந்தர் பல்டி' நடைபெற்றது. எம்.ஜி.ஆர். மற்றும் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என வழக் கறிஞர் சாந்திபூஷண் கேட்டபோது, எம்.ஜி.ஆர்., சர்க்காரியா கமிஷனிடம் எழுத்து மூலம் ஒரு வாக்குமூலம் கொடுத்திருந்தார். புகார்கள் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென்றும், சேலம் கண்ணன் என்ற வழக்கறிஞர் சொன்னதைத்தான் புகார் மனுவில், தான் குறிப்பிட்டிருப்பதாகவும் அந்த வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையைச் சொல்வது என்றால், எம்.ஜி.ஆர். கொடுத்த புகார் மனுவில், அணு அளவுக்குக்கூட உண்மை இல்லை என்பதை உணர்ந்துதான் ஓரம்கட்டி வைத்திருந்தனர். மூலையில் முடங்கிக்கிடந்த அந்தப் புகார்கள்மீது விசாரணைக் கமிஷன் எனும் அறிவிப்பே, நெருக்கடி நிலைக்கு ஆதரவு கேட்டும், அதனை அலட்சியப்படுத்தி விட்ட கழகத்தை மிரட்ட நினைத்துச் செய்யப்பட்டதுதான் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

...தொடரும்

● தமிழ்.கா.அமுதரசன் ●

ஃப்ளாஷ்பேக்



இலக்கிய அணி பாவேந்தர் விழா!

1992-ஆம் ஆண்டு, கழக இலக்கிய அணி சார்பில் நடைபெற்ற பாவேந்தர் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, முக்கனிகளுடன் 'பாவேந்தர் பாடல்கள்' முழுத் தொகுப்பினை அளித்து மகிழ்ந்தோம். அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்குப் பல மண்டபங்களில் அனுமதி மறுத்துவிட்டனர். அப்போது, வடசென்னை மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராக இருந்த நான், பல போராட்டங்களுக்குப் பின்னர், மயிலாப்பூரில் அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒரு மண்டபத்தை ஏற்பாடுசெய்தேன். மறக்க முடியாதவை அந்த நாட்கள்.



பி.டி.
பாண்டிச்செல்வம்

- பி.டி.பாண்டிச்செல்வம், மாநில இணைச் செயலாளர், கழக வர்த்தகர் அணி, சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

18.09.1949

தி.மு.கழகத்தின் முதல் அமைப்புக் குழுக் கூட்டம் கூடியது. கழகத்தின் இலட்சியங்களைக் கொண்ட குறிப்புகளுடன், 1,00,000 உறுப்பினர் சேர்க்கைப் புத்தகங்களை அச்சடிக்கத் திட்டமிடப்பட்டது. உறுப்பினர் ஆண்டு சந்தா, நான்கு அணாவாக நிர்ணயிக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தை தி.மு.க. அமைப்பு மாதமாகக் கொண்டு, அனைத்து ஊர்களிலும் உறுப்பினர்களைச் சேர்த்து, கிளைக் கழகங்களைத் துவக்க வேண்டும் என்று முடிவுசெய்தது.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900